## பாடம்- 22 சமுத்திரத்தைக் கடந்தனர் (யாத் 13-15)

அநேக நூற்றாண்டுகளாக வெகு சில மக்களுக்கு மட்டும் தான் எழுதவோ, படிக்கவோ தெரிந்திருந்தது. தந்தைகள் தம் பிள்ளைகளுக்கும், பேரப்பிள்ளைகளுக்கும் வரலாற்றினை கதைகள் வழியாகவும், கவிதைகளின் வழியாகவும், பாடல்களின் வழியாகவும் தான் கற்றுக் கொடுத்தனர்.

ஒவ்வொரு ஆண்டும் இஸ்ரவேல் குடும்பத்தினர் ஆண் ஆட்டுக்குட்டியை பலியாகச் செலுத்தி பஸ்காவை நினைவுக் கூர்ந்தனர். அதற்கு பின், அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு தேவன் இயற்கைக்கு அப்பாற்பட்ட முறையில் தங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்ததைப் பற்றி எடுத்து கூறுவார்கள். இது தேவன் இஸ்ரவேலருக்கு விளங்கப்பண்ணின அவரது வல்லமையைப் பற்றிக் கூறுகிறது.

இந்த சம்பவத்தை மறவாமல், இன்று வரை யூத ஜனங்கள் தங்கள் சந்ததிக்கு கூறி வருகிறார்கள்.

மோசே ஜனங்களை நோக்கி, ‘‘நீங்கள் அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து புறப்பட்ட இந்த நாளை நினைவு கூறுங்கள். கர்த்தர் பலத்த கையினால் உங்களை அவ்விடத்திலிருந்து புறப்படப்பண்ணினார். ஆகையால் நீங்கள் ஏழு நாட்களுக்கு புளிப்பில்லா அப்பத்தைப் புசிக்க வேண்டும். எங்களை எகிப்திலிருந்து வரும்படி செய்த இந்த மகா பெரியக் காரியங்களை நினைவுக் கூற இதை செய்கிறோம் என்று உங்கள் பிள்ளைகளிடம் கூற வேண்டும்’’ என்றான்.

அன்று இரவு, தேவன் இஸ்ரவேல் புத்திரரின் முதற்பேறாய் இருக்கிறவைகளையெல்லாம் அழிக்காமல் காத்தபடியால் முதற்பேராயிருக்கிற எல்லா மனிதர்களும், மிருக ஜீவன்களும் தேவனுடையது. ஆதலால், முதற்பேறாய் இருக்கிறவைகள் மீட்கப்பட்டு பரிசுத்தப்படுத்தப்பட வேண்டும்.

பல நூற்றாண்டுகளுக்கு பின்பு யோசேப்பும் மரியாளும், நியாயபிரமாணத்தில் சொல்லியிருக்கிறபடி இயேசுவை பரிசுத்தப்படுத்துமாறு தேவ ஆலயத்திற்குக் கொண்டுச் சென்றனர்.

கர்த்தர் இஸ்ரவேலர்களை தங்கள் பயணத்தில் வழி நடத்தும்படி, இரவில் அக்கினி ஸ்தம்பத்திலும், பகலில் மேகஸ்தம்பத்திலும் முன் சென்றார். இவைகள் தேவனுடைய சமூகம் தம் பிள்ளைகளுடன் இருக்கிறது என்பதை வெளிப்படுத்துகின்ற அடையாளங்களாகும். தேவன் இஸ்ரவேலர்களை கானானுக்கு கிழக்கு திசையை நோக்கி நேர் வழியாக நடத்தி செல்லாமல், சிவந்த சமுத்திரத்தின் வனாந்திர வழியாய் தெற்கு திசையில் நடத்திச் சென்றார்.

அவர்கள் புறப்படும்போது, மோசே தன்னோடு கூட யோசேப்பின் எலும்புகளை எடுத்துக் கொண்டு போனான்.

போர் வீரர்கள் ஆயுதங்களுடன் யுத்தத்திற்குச் சென்றாலும் வெற்றி பெறுபவர் தேவன் ஒருவரே. தேவன் ஜனங்களை செங்கடல் அருகில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் பாளயம் இறங்குமாறு மோசேயைச் சொல்லச் சொன்னார்.

அவர், “நான் பார்வோன் உங்களைப் பின்தொடரும்படிக்கு, அவன் இருதயத்தைக் கடினப்படுத்தி, நானே கர்த்தர் என்று எகிப்தியர் அறியும்படி பார்வோனாலும் அவனுடைய எல்லா ராணுவத்தாலும் மகிமைப்படுவேன்” என்றார்.

எபிரேயர்கள் சிவப்பு சமுத்திரம் வரை சென்றதைக் கண்ட பார்வோன், அவர்கள் வனாந்திரத்தில் அடைக்கப்பட்டிருந்ததை அறிந்து, தன் ஊழியக்காரரிடம், “நாம் ஏன் அந்த அடிமைகளைப் போகவிட்டோம்? அவர்கள் இங்கிருந்து நமக்கு வேலைச் செய்யக்கடவர்கள்” என்று கூறினான்.

எனவே அவன் 600 பிரதான இரதங்களையும், மற்ற இரதங்களையும், அவைகள் எல்லாவற்றிற்கும் அதிபதிகளான வீரரையும் கூட்டிக்கொண்டு இஸ்ரவேலரை துரத்தி சென்றான்.

இஸ்ரவேலர்கள் தங்கள் பின்னே எகிப்தியர்கள் இரதங்களில் வருவதைக் கண்டு, மோசேயை நோக்கி, ‘‘ஏன் எங்களை இங்கே சாகும்படிக் கொண்டு வந்தீர்? எகிப்திலே இருக்கும்போது, நாங்கள் எகிப்தியருக்கு வேலை செய்ய எங்களைச் சும்மா விட்டுவிடும் என்று கூறினோம் அல்லவா? நாங்கள் வனாந்திரத்திலே சாகிறதைப் பார்க்கிலும் எகிப்தியருக்கு வேலை செய்கிறது எங்களுக்கு நலமாயிருக்குமே’’ என்றார்கள்.

அப்பொழுது மோசே ஜனங்களை நோக்கி, ‘‘பயப்படாதிருங்கள்! நீங்கள் நின்று கொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள். இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காணமாட்டீர்கள். கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார் நீங்கள் சும்மாயிருப்பீர்கள்’’ என்றான்.

தேவன் மோசேயிடம், ‘‘இஸ்ரவேல் புத்திரரைப் புறப்பட்டுப் போகச் சொல். நீ உன் கோலை ஓங்கி, உன் கையைச் சமுத்திரத்தின் மேல் நீட்டி, அதை பிளந்துவிடு. அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையில் நடந்துபோவார்கள’’ என்றார்.

அப்பொது இஸ்ரவேலருக்கு முன் இருந்த மேகஸ்தம்பம் விலகி, அவர்களின் பின்னே நின்றது. அது எகிப்தியரின் சேனையும் இஸ்ரவேலரின் சேனையும் இராமுழுவதும் ஒன்றோடொன்று சேராதபடி அவைகள் நடுவில் வந்தது. எகிப்தியருக்கு அது மேகமும் அந்தகாரமுமாய் இருந்தது. இஸ்ரவேலருக்கோ அது இரவை வெளிச்சமாக்கிற்று.

பின்னர் மோசே தன் கையைச் சமுத்திரத்தின்மேல் நீட்டினான். அப்பொழுது கர்த்தர் இராமுழுவதும் பலத்த கீழ்காற்றினால் சமுத்திரம் ஒதுங்கும்படி செய்து, அதை வறண்டுப் போகப் பண்ணினார். ஜலம் பிளந்து பிரிந்து போயிற்று. வலதுபுறத்திலும் இடதுபுறத்திலும் ஜலம் அவர்களுக்கு மதிலாக நின்றது. ஆகையால் மோசேயும் இஸ்ரவேலரும் வறண்டநிலத்தில் இராமுழுவதும் நடந்து சென்றனர்.

அவர்கள் அனைவரும் சமுத்திரத்தை கடந்தப் பின்பு, தேவன் எகிப்தியரை அதே பாதையில் இஸ்ரவேலரை துரத்துமாறு செய்தார். அவர்களின் சேனை சமுத்திரத்தின் நடுவே பிரவேசித்த போது, தேவன் அவர்களைக் கலங்கடித்து அவர்களுடைய இரதங்களிலிருந்து உருளைகள் கழன்று போகவும், அவர்கள் தங்கள் இரதங்களை வருத்தத்தோடே நடத்தவும் பண்ணினார்.

எகிப்தியர்கள் தங்கள் நிலைமையின் தீவிரத்தை உணர்ந்தனர். அவர்கள், "நாம் ஓடிப்போவோம்! கர்த்தர் இஸ்ரவேலருக்காக யுத்தம் பண்ணுகிறார்" என்று கூச்சலிட்டார்கள்.

எகிப்தியர்கள் தங்கள் பாதுகாப்புக்கு நேராக ஓட முயற்சித்தப் பொழுது, தேவன் மோசேயிடம், "உன் கையை சமுத்திரத்தின் மேல் நீட்டு" என்றார். எனவே சூரியன் உதயமாகும் முன் மோசே தன் கையை சமுத்திரத்தின் மேல் நீட்டினான். உடனே அந்த ஜல மதில்கள் ஒன்றின் மேல் ஒன்று மோதிக்கொண்டு எகிப்தியரின் சேனையையும், இரதங்களையும், குதிரை வீரர்களையும் மூடிக் கொண்டது. ஒருவரும் தப்பிக்கவில்லை.

இஸ்ரவேலர் தேவனின் வல்லமையை சமுத்திரத்தின் அடுத்தப் பக்கத்திலிருந்துக் கண்டனர். சூரியன் உதயமானதும், எகிப்தியரின் பிணங்கள் கடற்கரையில் மிதந்துக் கொண்டிருந்ததை கண்டனர்.

கர்த்தர் எகிப்தியருக்கு எதிராகச் செய்த அந்த மகத்தான கிரியையை இஸ்ரவேல் ஜனங்கள் கண்டு, கர்த்தருக்கு பயந்து, கர்த்தரிடத்திலும் அவருடைய ஊழியக்காரனாகிய மோசேயினிடத்திலும் விசுவாசம் வைத்தார்கள். மோசே தன் சகோதரியான மீரியாம் என்ற தீர்க்கதரிசியின் தலைமையில் இஸ்ரவேலரோடு சேர்ந்து, தேவனை பாடல்களுடன் புகழ்ந்தான்.

அவளும் மற்ற ஸ்தீரிகளும் தம்புருகளோடு நடனமாடி, "கர்த்தரைப் பாடுவேன். அவர் மகிமையாய் வெற்றி சிறந்தார். குதிரையையும் குதிரைவீரனையும் கடலிலே தள்ளினார். கர்த்தர் என் பலனும் என் கீதமுமானவர். அவர் எனக்கு இரட்சிப்புமானவர். அவரே தேவன், அவருக்கு வாசஸ்தலத்தை ஆயத்தம்பண்ணுவேன். அவர் என் தகப்பனுடைய தேவன், அவரை உயர்த்துவேன்" என்று பாடினர்.

இந்தப் பாடம் மிகவும் முக்கியமானது ஏனெனில் தேவன் தமது ஜனங்களை அடிமைதனத்திலிருந்தும், உடனடி மரணத்திலிருந்தும் பாதுகாக்க வல்லவர் என்பதை வெளிப்படுத்துகிறது. அப்படியே இன்றைக்கும் அவர் தமது பிள்ளைகளுக்கு வைத்திருக்கும் திட்டத்திற்கு எதிராய் எதுவும் நிற்க முடியாது.

இந்தப் பாடத்தின் முக்கியமான உண்மை என்னவென்றால் தேவன் தமது ஜனங்களை அடிமைதனத்திலிருந்தும், ஆபத்திலிருந்தும் காக்க வல்லவராக இருக்கிறார் என்பதே.

இந்த பாடத்தை திரும்பி பார்க்க பின்வரும் கேள்விகளுக்கு விடையளிக்கவும்.

1. இஸ்ரவேலர்கள் எகிப்தியர்களால் கொல்லப்படுவோம் என்று பயந்த போது, மோசே ஜனங்களிடம் என்ன கூறினான்? (6 நொடிகள் நிற்க)

''பயப்படாதிருங்கள்! நீங்கள் நின்றுக் கொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள் என கூறினான்'' என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

2. எகிப்திய சேனைகள் ஜனங்களை பின் தொடர முயன்றப் பொழுது என்ன நடந்தது? (5 நொடிகள் நிற்க)

''திடீரென்று கடலின் ஜல மதில்கள் ஒன்றின் மேல் ஒன்று மோதிக் கொண்டு, எகிப்திய சேனையை முழுவதுமாய் மூடிக் கொண்டது. ஒருவரும் தப்பிக்கவில்லை'' என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

3. மோசேவிற்கு அந்த ஜனங்களின் பதில் என்னவாயிருந்தது?

(5 நொடிகள் நிற்க)

‘‘அவர்கள் தேவனுடைய ஊழியக்காரனாகிய மோசேயினிடத்தில் விசுவாசம் வைத்தார்களா’’ என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

இதில் உங்களுக்கான வீட்டுப்பாடம் என்னவென்றால், குறைந்தது மூன்று முறையாவது இந்தக் பாடத்தைக் கேளுங்கள். நீங்கள் இந்தக் பாடத்தை கேட்கும் போது இது எப்படி நடத்திருக்கும் என்று உங்கள் மனதில் கற்பனை செய்து பாருங்கள். நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ளக் கூடிய அளவிற்கு உங்கள் சொந்த வார்த்தையிலே திரும்ப சொல்லுங்கள். பாடத்தை திரும்ப திரும்ப கேட்டு சொல்லிப் பாருங்கள்.

நீங்கள் சரியாக சொல்லுகிறீர்கள் என்ற நம்பிக்கை உங்களுக்குள் வரும் வரைக்கும் சொல்லிப் பழகுங்கள். அதற்காக 45 நிமிடம் ஒதுக்கி கற்றுக் கொள்ளுங்கள்.

இந்த பாடத்தைப் பற்றி தெரியாத ஒரு நபருக்கு இந்த பாடத்தை கற்றுக் கொடுங்கள்.

தேவன் எகிப்திய சேனையை தோற்கடித்தப் பின்னர் மோசேயும் மீரியாமும் கர்த்தரைப் புகழ்ந்துப் பாடியப் பாட்டின் முதல் சில வரிகளை மனப்பாடம் செய்யுங்கள் இந்த ஜெயப்பாடல் யாத்திராகமம் 15:1-21 இல் கொடுக்கப்பட்டிருக்கிறது.

‘‘கர்த்தரைப் பாடுவேன்;
அவர் மகிமையாய் வெற்றி சிறந்தார்.
குதிரையையும் குதிரை வீரனையும் கடலிலே தள்ளினார்.
கர்த்தர் என் பெலனும் என் கீதமுமானவர்.

அவர் எனக்கு இரட்சிப்புமானவர்’’.

பாடம் முடிந்தது